2009 ஜூலை 9]

107—

நூலகம்

***75891—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நூல அள்ளி ஊராட்சி, நூல அள்ளியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நூல அள்ளி ஊராட்சி, நூல அள்ளியில் ஊர்ப்புற நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி சட்டமன்றத் தொகுதியிலுள்ள நூல அள்ளி ஊராட்சிப் பகுதியில் குறைந்தது 10,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, அந்தப் பகுதி, படித்த இளைஞர்கள் அதிகமாக உள்ள பகுதி. ஆகவே, அந்தப் படித்த இளைஞர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்தின் அவசியம் கருதி, அரசு சார்பில் ஒரு நூலகம் அமைத்துக் கொடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய விவரங்களின்படி, நூல அள்ளி ஊராட்சியில் இருக்கக்கூடிய மக்கள் தொகை 4,162. இதில், படித்த ஆண்கள் 2,150; படித்த பெண்கள் 1,112. இந்த ஊரிலே ஒரு பகுதி நேர நூலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், நூலகம்

செயல்படுவதற்கு வாடகை இல்லாத கட்டடம், சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு ஐந்து சென்ட் காலி மனை, தலா 1,000 ரூபாய் செலுத்தி இரண்டு பேர் புரவலராகச் சேரக்கூடிய ஒரு நிபந்தனை, நூலக உறுப்பினர் காப்புத் தொகையாக ரூ.20 செலுத்தி, 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும், 2,000 ரூபாய் மதிப்புள்ள தளவாடங்கள் வழங்கிட வேண்டுமென்று பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பட்சத்தில், அங்கே ஒரு பகுதி நேர நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள பெரும்பாலான அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நூலகம் இருந்தும், தனியாக நூலகர்கள் இல்லாத காரணத்தினால், அவை சரியாகச் செயல்படுவதில்லை. ஆகவே, புதிதாக நூலகர் ஒருவரை நியமிக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே இயங்கக்கூடிய நூலகங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு ‘புத்தகப் பூங்கொத்து’ போன்ற பல நல்ல திட்டங்களை அரசு இப்பொழுது நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. தனியாக நூலகர்களை நியமிக்கக்கூடிய செயற்குறிப்பு குறித்து, மத்திய அரசினுடைய success programme-ன் அடிப்படையில், அதற்கான நிதி உதவியினைக் கோரியிருக்கிறோம். நடவடிக்கையினைத் தொடர்ந்து அரசு மேற்கொள்ளும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே அமைந்திருக்கின்ற மேலாரணி அரசு மேல்நிலைப்

2009 ஜூலை 9]

பள்ளியில், கடந்த வாரம் ஒரு மாணவன் குடிநீர் குடிப்பதற்காக அருகிலே இருந்த கிணற்றுக்குச் சென்று தண்ணீர் அருந்தியபோது, தவறி விழுந்து மரணம் அடைந்துவிட்டான். அந்த மாணவனுக்கு அரசின் சார்பிலே, நிதி உதவி அளிக்கப்படுமா என்பதையும், சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தினால், மாணவர்களுடைய பாதுகாப்பு பாதிப்பிற்குள்ளாகின்ற காரணத்தினால், மேலாரணி அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன் (மணியடிக்கப்பெற்றது) இது முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிருஷ்ணமூர்த்தி, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் இறந்து ஒரு வாரம் ஆகின்றது. இதுவரையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதைப் பற்றிய தகவலைத் தெரிவிக்கவில்லை. அப்படி தெரிவித்திருந்தால், உரிய உதவி அந்தக் குடும்பத்திற்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கும். இப்போதாவது அதுபற்றிய விவரங்களை எனக்கு அனுப்புவாரேயானால், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் எத்தனை நூலகங்கள் இருக்கின்றன? பகுதிநேர நூலகங்கள் எத்தனை இருக்கின்றன? அநேக பகுதி நேர நூலகங்களில் பணியாளர்கள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், இந்தப் பகுதி நேர நூலகங்களுக்குப் பணியாளர்கள் எப்போது நியமிக்கப்படுவார்கள் என்பதை தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் நூலகங்கள் 12-ம் சேர்த்து, தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 4,002 நூலகங்கள் இருக்கின்றன. பகுதி நேர நூலகங்கள் 565 இருக்கின்றன. நூலகங்களில் நியமனங்களைப் பொறுத்தமட்டில்

[2009 ஜூலை 9

இப்போது 865 பேரை நியமித்திருக்கிறோம். தேவைக்குத் தக்க வகையிலே பகுதி நேர நூலகங்களிலே நூலகர்களை நியமிப்பதற்கு அரசு தொடர்ச்சியான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நகர்ப்புறங்களில் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களிடம் போதைப் பழக்கம் அதிகமாக வந்திருப்பதாகப் பெற்றோர்கள் கவலைப்படுகின்றார்கள். சாக்பீஸ், இருமல் மருந்து மற்றும் ஆப்பரேஷனுக்குப் பிறகு உபயோகப்படுத்தக்கூடிய வலி மருந்து போன்றவற்றைப் பயன்படுத்தி, இந்த மாதிரியான போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகும் மாணவர்களைத் திருத்துவதற்கு, வாரம் ஒருமுறையாவது Drug abuse அதாவது போதைப் பொருட்கள் உபயோகத்திற்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு, மாணவர்களிடம் அதுகுறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கு, கவுன்சிலிங் வகுப்புகளைக் கண்டிப்பாக எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும், ஒழுக்கத்தையும் கல்வியோடு சேர்த்து கற்றுக்கொடுக்க வேண்டிய ஆசிரியர்களிடம் புகைப் பழக்கம், மதுப் பழக்கம் இருந்தால் அவர்களையும் தண்டிக்கக்கூடிய...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. சேகர், மூலக் கேள்வி நூலகம் அமைப்பது குறித்து. (குறுக்கீடு) சரி, சொல்லி முடியுங்கள்.

திரு. எஸ்.வி. சேகர்: நடவடிக்கையினை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளைப் பொறுத்தமட்டில், வகுப்பறைகளில் நீண்ட காலத்திற்கு முன்பாக Moral classes என்று சொல்லக்கூடிய நீதி போதனை வகுப்புகள் இருந்து வந்தன. மீண்டும் அந்த வகுப்புகளைத் தொடங்கி, வாழ்க்கைக் கல்வியைப் போதிக்கக்கூடிய வகுப்புகளை நடத்துவதற்கு அரசு முயற்சியினை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் drug abuse குறித்து சொன்னார்கள். Child abuse குறித்தும்கூட, விழிப்புணர்வுகளை அரசு ஏற்படுத்திக்கொண்டு வருகிறது. அதுகுறித்து பத்திரிகையில் பார்த்திருக்கலாம். எனவே,

2009 ஜூலை 9]

அப்படிப்பட்ட நீதி போதனை வகுப்புகளில் இந்த child abuse, drug abuse ஆகியவற்றைக் குறித்தும் மாணவர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக நிச்சயமாக அரசு நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

சாலை வசதி

***39979—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, சில்லார அள்ளியிலிருந்து பால்சிலம்பு மலைப் பகுதிக்கு சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மாத்திரம்தான், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் மக்கள் போன்றவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. குறிப்பாக, மலைவாழ் மக்கள், சுதந்திரம் அடைந்து 62 ஆண்டுகளாகியும் ஆடு மாடுகளைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சாலை வசதியோ, போக்குவரத்து வசதியோ மற்றும் அடிப்படை வசதியோ இல்லாத கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக, பால்சிலம்பு போன்ற பகுதிகளில் பிரசவ காலங்களில் மருத்துவமனைக்கு வரவேண்டுமானால், தொட்டில் கட்டித்தான் வரவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களும் இந்த மண்ணிலே வாழப் பிறந்தவர்கள் என்ற நிலையில்